4th November 1966]

முதியோர் உதவித்தொகை

*388 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1965-ல் சென்னை மாநகரில் முதியோர் உதவித் தொகை பெற்றோர் எத்தனை பேர்?

(இ) மாநில முழுவதும் 1965-ல் மேற்படி உதவித்தொகை பெற்றோர் எத்தனை பேர்?

(உ) 1964-ல் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது? 1965-ல் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) 1,325 as on 1st December 1965.

(b) 41,197 as on 1st December 1965.

(c) Rs. 1,17,37,200 and Rs. 1,09,13,400.

திரு. இராம. அரங்கண்ணல்: சார், 1964-ம் ஆண்டில் கிட்டத் தட்ட ஒன்றேகால் கோடி ரூபாய் முதியோர் பென்ஷனைக் கொடுத்து, அது அடுத்த ஆண்டில் குறைந்து ரூ. 1,09,00,000 ஆக வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி குறைந்துபோனதற்குக் காரணம் என்ன என்று அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒரு ஆண்டில் முதியோர் பென்ஷன் பெறுகிறவர் மறு ஆண்டில் இல்லாமல் இருக்கலாம், மறைந்திருக்கலாம். புதியவர்களும் சேர்க்கப்படுகிறார்கள்; அப்படிச் சேர்க்கும்போது பரிசீலனை செய்து சேர்க்க வேண்டும். அந்த ஆண்டில் சேர்க்கப்பட்டவர்களைவிட மறைந்தவர்கள் அதிக மாக இருந்திருக்கலாம். யார் யார் புதிதாகச் சேர்க்கப்பட வேண்டுமோ அப்படிப்பட்டவர்கள் சேர்க்கப்பட்டுக்கொண்டுதான் வருகிறார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி: சார், முதியோர் பென்ஷன் கோரி வரும் மனுக்கள் பேரில் உடனுக்குடன் உத்தரவு போடப்படுவ தில்லை. ஒரு ஆண்டு இரண்டு ஆண்டுகள் கூட ஆகிவிடுகின்றன. முதியோர் இறந்து கூடப் போய்விடுகிறார்கள். ஆகவே, அப்படிப் பட்ட மனுக்களை உடனுக்குடன் பரிசீலனை செய்து வழங்க வேண்டும் என்று சர்க்கார் உத்தரவு போடுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பரிசீலனையில் தாமதம் ஒன்றும் இல்லை. சில சமயங்களில் தவறுகள் நடந்துவிடுகின்றன, நடந் திருக்கின்றன. அதனால் அதிகாரிகள் தங்கள் மீது குற்றம் சுமத் தப்படக்கூடாது என்று ஜாக்கிரதையாக இருக்கவேண்டியிருக் கிறது, தாமதம் இருக்கக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டிருக் கிறது.

[4th November 1966

திரு. இராம. அரங்கண்ணல் : சார், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் 1,325 பேர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்கள் என்று அறிவிக்கலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. வை. சங்கரன் : காலதாமதத்தைத் தவிர்க்க அப்ளிகேஷன் வந்த மூன்று மாதத்திற்குள் அதை டிஸ்போஸ் செய்யவேண்டும் என்ற ஒரு நியதியை அல்லது விதியை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மூன்று மாத வரம்பு என்று விதித்தாலும், அதற்குள்ளே போதிய தகவல் தெரியவில்லை என்றால், சரியாக பரிசீலனை செய்ய வேண்டிய காலம் ஆகத்தான் செய்யும். பரிசீலனை இல்லாமலே எப்படியும் கொடுக்கவேண்டும் என்று சொல்வது சரியில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், மனுச் செய்கிறவர்கள் வயது சரியா என்று வோட்டர் லிஸ்டைப் பார்த்து சரி பார்க்க வேண்டியிருக்கிறது. அல்லது டாக்டர்களிடம் அனுப்பி பரீட்சை செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதன்பிறகு சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதைத் தவிர்க்க, மனுச் செய்யும் போதே மனுவோடு டாக்டர் சர்டிபிகேட் அல்லது சப்-ரிஜிஸ்ட்ரார் சர்ட்டிபிகேட் வாங்கி அனுப்ப வேண்டும் என்று செய்து விட்டால் காலதாமதத்தை தவிர்க்க முடியாதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒவ்வொருவரும் அவ்விதமாக சர்ட்டிபிகேட் வாங்கி அனுப்ப வேண்டும் என்று சொன்னால், அது அவர்களுக்குத் தொல்லையாக இருக்கும். அதோடு எல்லோருக்கும் அதற்கு அவசியம் இருக்காது. ஆகவே, மனுக் கொடுக்கும்போதே சர்ட்டிபிகேட் அனுப்ப வேண்டும் என்று சொல்வது அவர்களுக்கு நல்லதல்ல.

திரு. சா. கணேசன் : இந்திய சர்க்காரிலே சம்பந்தப்பட்டவர்கள் கூறுவதிலிருந்து இந்த முதியோர் பென்ஷன் கொடுப்பதில் அக்கறை இல்லாதது போன்ற செய்தி வெளியாகியிருக்கிறது. அந்த அந்த மாநிலங்களிலேயே செய்துகொள்ள வேண்டும் என்பது போலவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் நம் மாநிலம் இதைத் தொடர்ந்து நடத்தவும் இன்னும் தகுதியுள்ளவர்களுக்கு, முதியோர்களுக்கு உதவித் தொகை கொடுக்கவும் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இன்று காலையில் கூட இந்த முதியோர் திட்டத்தில் மத்திய சர்க்காருக்கு உள்ள அக்கறை பற்றிய செய்தி வந்திருந்ததை பார்த்திருக்கலாம். மேலும்,

மத்திய சர்க்காருடைய எண்ணத்தைத் தெரிந்து கொள்ளாமலேயே இந்த அரசாங்கமே, தாமாகவே, முதியோர் பென்ஷன் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்தது, நிறைவேற்றி வருகிறது, தொடர்ந்து நிறைவேற்றும்.

திரு. வை. சங்கரன் : இப்பொழுது இருக்கும் திட்டப்படி, விதிப் படி, வயது வந்த பிள்ளைகள் இருந்தால், அவர்களுக்குக் கிடையாது என்றிருக்கிறது. சில சமயங்களில் பிள்ளைகளுக்கு பயித்தியம் பிடித்திருக்கலாம், அல்லது அந்தப் பிள்ளைகளால் 'டெஸர்ட்' செய்யப்பட்டிருக்கலாம், ஓடிப்போயிருக்கலாம். அதுபோன்ற கேசுகளை 'எக்ஸப்ஷனல்' கேசுகளாகப் பாவித்து, விதியைத் தளர்த்தி பரிசீலனை செய்து கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது போன்று இருக்கும் கேஸ் களை கனம் அங்கத்தினர் எழுதியனுப்பினால், மேலும் விதியைத் தளர்த்த வேண்டுமா என்பதையெல்லாம் கவனிக்கலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, 1965-ம் ஆண்டு ஒரு கோடி ஒன்பது லட்சம் வரை முதியோர் களுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் தொகை முழுவதும் மாநில சர்க்காரே ஏற்றுக்கொண்டதா அல்லது அதிலே மத்திய சர்க்காருடைய மானியமும் உண்டா என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் திட்டம் மாநில அரசாங்கமே நிறைவேற்றிய திட்டம். இது திட்டத்திற்கு—ஐந்தாண்டுத் திட்டம் ப்ளானுக்கு உட்பட்டது. ஆனால், இந்த அரசாங்கமே ஏற்றுக்கொண்டு நிறைவேற்றும் திட்டம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தற்போதுள்ள வயது வரம்பு 60; அங்கஹீனமானவர்களுக்கு அப்படிப்பட்ட வரம்பில்லாமல், தகுதி யுள்ளவர்களுக்கெல்லாம் கொடுக்க யோசனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித் தனிக் கேள்வி போடவேண்டும்.

மாவட்ட நீதிபதிகள்

* 389 **கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்ட நீதிபதிகளில் எத்தனை பேர் ஓய்வு பெற்ற பின்பும் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் வேலை பார்த்து வருகின்றார்கள்?

(இ) அவர்களது பதவிக்காலம், ஓய்வு பெற்ற தேதியிலிருந்து எத்தனை ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Ten, Sir.

(b) Normally, till they attain the age of 58.